இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முகாமைத்துவக் கற்கைகள் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் - மட்டம் 03
B.Sc/B.Ed. பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம்
இறுதிப் பரீட்சை – 2017
உங்கள் வேலைகளையும் நபர்களையும் முகாமை செய்தல் -MCU 1108
காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி: 10/08/2017 நேரம்: 09.30 மு.ப – 11.30 மு.ப.

*அறிவுறுத்தல்கள்:*

- எவையேனும் நான்கு (04) வினாக்களுக்கு விடையளிக்குக.
- எல்லா வினாக்களும் சம புள்ளிகளைக் கொண்டுள்ளன.

01. (a) முகாமைத்துவ செயன்முறைகள் யாதெனக் கருதுகின்றீர்கள்? வரைபடம் ஒன்றின் உதவியுடன் ஆராய்க. (07 புள்ளிகள்)

(b) திட்டமிடல் ஏன் முக்கியமானது? முகாமைத்துவத்தில் திட்டமிடல் தொழிற்பாட்டின் படிகள் எவை? (08 புள்ளிகள்)

(c) இலங்கை வணிக நிறுவனம் ஒன்றைக் தெரிவு செய்து, அதன் முகாமைத்துவ மட்டங்கள் ஒவ்வொன்றிலும் பயன்படுத்தப்படும் திட்டங்களின் வகைகளை ஆராய்க. (10 புள்ளிகள்)

02. (a) முகாமைத்துவத் தேர்ச்சிகள் என்பதன் பொருள் யாது? தெரிவு செய்யப்பட்ட வணிக நிறுவனம் ஒன்றின் முகாமைத்துவத்தின் வெவ்வேறு வகையான தேர்ச்சிகளையும், வெவ்வேறு மட்டங்களையும் சுருக்கமாக விளக்குக. (07 புள்ளிகள்)

(b) வணிக நிறுவனம் ஒன்றின் வெவ்வேறு மட்டங்களிலுள்ள முகாமையாளர்களின் கடமைகளையும், பொறுப்புக்களையும் இனம் கண்டு ஆராய்க. (08 புள்ளிகள்)

(c) "திறனாற்றலும், வினைத்திறனுமுள்ள தீர்மானம் எடுத்தல், நிறுவனத்தின் நோக்கங்களை வெற்றிகரமாக அடைவதற்கு உதவுகின்றது" இக் கூற்றை ஏற்றுக் கொள்கின்றீர்களா? உதாரணங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

03. வணிக நிறுவனங்களில் கடந்த காலத்திலிருந்து இற்றை வரையும், விருத்தி செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் முகாமைத்துவ அணுகுமுறைகளை சுருக்கமாக விளக்குக. (25 புள்ளிகள்)

04. (a) மனிதவள முகாமைத்துவம் என்பது யாது? (05 புள்ளிகள்)

(b) மனிதவளத் திட்டமிடலின் கட்டங்களை சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

(c) நிறுவனங்களுக்கு நபர்களை கவரும் முறைகளை தகுந்த உதாரணங்களுடன் விபரிக்குக. (10 புள்ளிகள்)

05. "வணிகத்திற்கும் அதன் சூழலுக்கும் இடையே நெருக்கமான தொடர்ச்சியான இடைத்தொடர்பு உண்டு"

(a) வணிக நிறுவனம் ஒன்றின் சூழலை எவ்வாறு வகைப்படுத்துவீர்கள்? (05 புள்ளிகள்)

(b) நிறுவனம் ஒன்று எவ் வழிகளில் அதன் சூழலுடன் இடைத் தொடர்பை கொண்டுள்ளது மற்றும் அதில் தங்கியுள்ளது என்பதை ஆராய்க. உங்களின் விடை நிறுவனச் சூழலின் பெரும் கூறுகளை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். உங்களின் விடைக்கு ஆதரவாக உதாரணம் ஒன்றைப் பயன் படுத்துக. (20 புள்ளிகள்)

06. பின் வருவனவற்றிக்கு சிறு குறிப்புக்களை எழுதுக.

(i) முகாமையாளர்களின் சமூகப் பொறுப்புக்கள்

(ii) தீர்மானம் எடுப்பதில் பழமை வாய்ந்த மாதிரி (Classical Model of Decisions Making)

(iii) செயற்பாட்டு முகாமைத்துவம்

(iv) தொழில்வினையாளரின் முகாமையாளர் வகிபாகங்கள்

(v) நிறுவனங்களிலுள்ள பண்பாட்டின் முக்கியத்துவம்

(5 X 5 = 25 புள்ளிகள்)

(பதிப்புரிமையுடையது)